உலக வாய் வழி சுகாதார தினத்தையொட்டி

# மெட்ரோ ரெயில் பயணிகளுக்கு பல் பாதுகாப்பு பற்றி நாளை விழிப்புணர்வு

## மருத்துவர்கள் ஏற்பாடு

சென்னை, ஜூலை.31-

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 1-ந்தேதி உலக வாய் வழி சுகாதார தினமாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி சென்னை மெட்ரோ ரெயில் பயணிகள் மற்றும் மெட்ரோ ரெயில் அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் பயனடையும் வகையில் நாளை (புதன்கிழமை) கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரெயில் தலைமை அலுவலகத்தில் முகாம் நடத்தப்படுகிறது. மேலும் பயணிகள் பயனடையும் வகையில் ஓடும் ரெயிலில் பயணிகளுக்கு பல் பாதுகாப்பு குறித்து துண்டு பிரசுரங்களும், இலவச மருந்துகளும் வழங்கப்படுகிறது.

இதற்காக மீனாட்சி அம்மாள் பல் மருத்துவ கல்லூரி முதுகலை கல்வி இயக்குனர் டாக்டர் ஜெய்தீப் மகேந்திரா தலைமையில் 25 மருத்துவர்கள் நாளை காலை 8 மணியில் இருந்து காலை 10.30 மணி வரை கோயம்பேட்டில் இருந்து சென்டிரல் வரையிலும், சென்டிரலில் இருந்து விமானநிலையம் வரையிலும், விமானநிலையத்தில் இருந்து கோயம்பேடு வரையிலும் ரெயிலில் பயணம் செய்து பயணிகளுக்கு பல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர்.

மேற்கண்ட தகவலை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்து உள்ளது.